1990 மார்ச் 29]

வட்டத்தைப் பிரித்து, புதிதாக இலுப்பூர் வட்டம் ஏற்படுத்துவது குறித்து 1991–92 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் பகுதித் திட்டத்தில் ஆய்வு செய்ய வேண்டி தக்க செயற் குறிப்பை உரிய காலத்தில் அனுப்பி வைக்குமாறு சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். 1991 ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு காரணமாக வருவாய் நிர்வாக ஆட்சி வரம்பில் 30–6–1991 வரை எவ்வித மாற்றமும் செய்யத் தடையாணை அமலில் உள்ளது.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் ; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே தாலுக்கா வட்டங்களின் எல்லையும், ஜனத்தொகையும் வளர்ந்து கொண்டே இருப்பதாலும், நிர்வாகச் செயல் முறையில் சிரமங்கள் உள்ளதாலும், மாவட்டங்களைப் பிரித்ததைப் போல, தமிழகத்தில் இருக்கும்படியான தாலுக்காக்களைப் பிரித்து சிறிய வட்டங்களாக ஆக்கி, நிர்வாகத் திறனை அதிகரிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : நான் ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் பல சந்தர்ப்பங்களில் இப்படிப்பட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். மாவட்டங்கள் பிரிவினைகள் முடிந்ததற்குப் பிறகு தாலுக்காக்கள் பிரிப்பது பற்றி யோசிக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறேன். அதோடு 1991-ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு காரணமாக வருவாய் நிர்வாக ஆட்சி வரம்பில் 30–6–1991 வரை எவ்வித மாற்றமும் செய்யத் தடையாணை அமலில் உள்ளது என்றும் குறிப்பிட்டிருக்கிறேன். ஆகவே இந்தக் கேள்வி எழவில்லை என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கத்திவாக்கம் நகரியத்தில் பேருந்து நிலையம் கட்டும் பணி.

*2175 — திரு. டி. கே. பழனிச்சாமி :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கத்திவாக்கம் நகரியத்தில் பேருந்து நிலையம் கட்டுவதற்கு டெண்டர் விடப்பட்டு ஓர் ஆண்டு ஆகியும் இன்னும் பணி தொடங்கப் பெறாததற்கான காரணம் என்ன ?

(ஆ) எப்பொழுது அந்தப் பணி தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : துணைத் தலைவர் அவர்களே:

(அ) மற்றும் (ஆ) : கத்திவாக்கம் நகரியத்தில் பேருந்து நிலையம் கட்டும் பணி தொடங்கப்பட்டுவிட்டது.

திரு. டி. கே. பழனிச்சாமி : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கத்திவாக்கம் நகரிய பஸ் நிலையத்தினுடைய கட்டிடத் திறப்பு விழாவிற்கு—அடிக்கல் நாட்டு விழாவிற்கு அமைச்சர் அவர்களை அழைத்திருக்கிறேன். வருவதாகக்கூட ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இது நீண்ட நாட்களுக்கு முன்பு போடப்பட்டு இருந்த கேள்வி. ஆகவே காலம் கடந்து வந்திருக்கிறது என்றாலும், விரைவில் வேலைகள் துவங்கி —இன்னும் நாள் ஆகலாம் என்று நினைக்கிறேன் — அமைச்சருடைய திருக்கரங்களாலே அந்த அடிக்கல் நாட்டும் விழாவிற்கு வரவேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: துணைத் தலைவர் அவர்களே, கத்திவாக்கம் பேருந்து நிலையம் கட்டப்படக்கூடிய இடத்தை கடந்த 3–7–1989 அன்று மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களோடு சென்று நான் நேரடியாகப் பார்த்து உடனடியாக வேலைகள் தொடங்கப்பட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் உடனடியாக மதிப்பீடுகள் தயார் செய்து வரைபடங்கள் தயார் செய்யப்பட்டு, தற்போது வேலையைத் தொடங்கியிருக்கின்றார்கள். விரைவில் கட்டி முடிப்பதற்கான ஏற்பாடுகள் விரைந்து செய்யப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திருநெல்வேலி-சென்னை பகல் நேர துரித ரயில்.

*5513—திரு. அ. லெ. சுப்பிரமணியன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலியிலிருந்து சென்னைக்கு வைகை எக்ஸ்பிரஸ் போன்று பகல் நேர மின்னல் வேக துரித ரயில் ஒன்று விட இரயில்வே துறை அமைச்சரை வேண்டி கோரிக்கை மனுக்கள் தமிழக அரசுக்கு அனுப்பப்பட்டனவா ?

(ஆ) ஆம் எனில், அவ்வாறு துரித ரயில் விட இரயில்வே துறையை இந்த அரசு வற்புறுத்துமா?